# வேர்கள்

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்

LONDON TAMIL CATHOLIC QUARTERLY ROOTS

LONDON TAMIL CATHOLIC CHAPLINCY,304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,

E-Mail: rootseditoruk@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257

வேர் - 4 கிளை - 3 25.12.2019 விலை: £1

## "இவ்வுலகிற்கு வெறுமையான வார்த்தைகளும், வாக்குறுதிகளும் தேவையில்லை, மாறாக, சமாதானம் செய்வோரின் சாட்சியம் தேவை"

**- 2020ம் ஆண்டு உலக அமைதி நாள் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் -**




"அமைதி, நம்பிக்கையின் ஒரு பயணமாக..." என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2020ம் ஆண்டின் முதல் நாளன்று சிறப்பிக்கப்படும் உலக அமைதி நாளுக்குரிய செய்தியை வெளியிட்டுள்ளார்.ஒவ்வோர் ஆண்டும், புத்தாண்டு நாளன்று கத்தோலிக்கத் திருஅவை, உலக அமைதி நாளைச் சிறப்பித்து வருவதையொட்டி, திருத்தந்தை வருகிற ஆண்டுக்கென வெளியிட்டுள்ள இச்செய்தியில், "அமைதிக்காக நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை, எத்தனை தடைகளையும், பிரச்சனைகளையும் சந்தித்தாலும், முன்னோக்கிச் செல்ல நம்மை உந்தித்தள்ளுகிறது என்று, திருத்தந்தை தன் செய்தியைத் துவக்கியுள்ளார்.

சமுதாயத்தில் உள்ள பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ள இயலாமை என்ற குறைபாடே, நம்முள், மோதல்களையும், போர்களையும் உருவாக்குகின்றன என்பதை, தெளிவுபடுத்தும் திருத்தந்தை, மனித சமுதாயம், தன் நினைவிலும், உடலிலும், போர்களின் காயங்களையும், வடுக்களையும் தாங்கி வாழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.மனிதர்கள் நடுவே, நிலையற்ற தன்மையும், அச்சமும் உருவாகும் வேளை, அவற்றிற்கு தீர்வாக, மக்களிடையே உறவையும், உரையாடலையும் வளர்ப்பதற்குப் பதில், பகைமை உணர் வுகள் என்ற நஞ்சை இவ்வுலகம் விதைக்கிறது என்பதை, தன் ஜப்பான் நாட்டு திருத்தூதுப் பயணத்தில் இன்னும் ஆழமாக தான் உணர்ந்ததாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

"நினைவு, ஒருங்கிணைப்பு மற்றும் உடன்பிறந்த நிலை ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட செவிமடுத்தலின் பயணமே, அமைதி" என்பது, திருத்தந்தை வெளியிட்டுள்ள இச்செய்தியின் இரண்டாம் பகுதி.அமைதி வழிமுறை என்பது, பொறுமையாக, ஒருங்கிணைந்து, உண்மையையும், நீதியையும் தேடுவதற்கு மேற்கொள்ளப்படும் பயணம் என்றும், போர்களில் இறந்தோரின் நினைவுக்கு நாம் செய்யும் மரியாதை என்றும், திருத்தந்தை, குறிப்பிட்டுள்ளார்.நாம் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகும்பொருட்டு, கிறிஸ்து, தம் உயிரை அளித்தார் (காண்க. உரோமையர் 5:6-11) என்பது நம் கிறிஸ்தவ அனுபவம் என்பதை, இப்பகுதியில் சுட்டிக்காட்டும் திருத்தந்தை, நீதியின் வழியாக, ஒப்புரவைக் கொணர்வதில் திருஅவை மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது என்று எடுத்துரைத்துள்ளார்.

## மனித நேயத்தை மலரச் செய்யவே கிறிஸ்து இயேசு உலகிற்கு வந்தார்

**யாழ் மறைமாவட்ட ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி - 2019**



கிறிஸ்து இயேசுவின் பிறப்பு விழாவை உலகெங்கும் வாழும் இறைமக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். உலக வரலாறே கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) மற்றும் கிறிஸ்துவுக்கு பின் (கி.பி.) என்ற வண்ணமே அசைந்து வருகிறது. அத்தகைய முக்கியத்துவம் பெற்ற புனித நிகழ்வாக, மறை நிகழ்வாக மற்றும் எமது விசுவாச வாழ்வின் அத்திவார நிகழ்வாக கிறிஸ்து இயேசுவின் பிறப்பு அமைந்துள்ளது. கிறிஸ்து இயேசு மக்களின் தீமைகளையும், பாவங்களையும் வேரோடு களைந்து மனுக்குலத்திற்கு மீட்பளிக்கவே உலகிற்கு வந்தார். ***"உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும் பூவுலகில் நன்மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக"*** என கிறிஸ்து பிறப்பின் போது ஒலித்த வானதூதரின் வாழ்த்திசை உலகில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவே கிறிஸ்து இயேசு பிறந்தார் என்பதை மெய்ப்பிக்கின்றது.

கிறிஸ்து இயேசு மனிதரை கடவுளாக்க இவ்வுலகிற்கு வரவில்லை. மனிதர்கள் மத்தியில் மனித நேயத்தை கட்டியெழுப்பவே அவர் இவ்வுலகிற்கு வந்தார். அதாவது மனிதர்களை மனிதர்களாக்கவே அவர் இவ்வுலகில் பிறந்தார். *மனித மாண்பு நிலைகுலைந்து, மனிதநேயம் குழிதோண்டி புதைக்கப்பட்ட அவலகரமான நிலையிலேதான் கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ந்தது.*

(தொடர்ச்சி 20ம் பக்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வொலிங்டனில் நடைபெற்ற திருப்பலியின்போது





ஏர்ள்ஸ்பீல்ட் திருப்பலியின் போது




சவுத்தோல் பங்கில் இடம்பெற்ற சிறுவர் தின திருப்பலியின் போது




Gantshill Tamil Mass Centre Catechism Class




Tamil Chaplaincy- Southend on Sea ஒளி விழா 2019



Catechism Examination Corrections at Chaplaincy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆகிய நான் குருக்கள், துறவியர், பொது நிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்

**கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய இறைமக்களே!**

இறை அருளுடன் மீண்டுமொரு திருவருகைக் காலத்தோடு புதியதொரு திருவழிபாட்டு ஆண்டை ஆரம்பிக்கின்றோம். ஆண்டவர் இயேசுவில் இறைவன் வெளிப்படுத்திய மீட்பின் உன்னதமான மறைபொருளை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டிலும் முழுமையாக வாழ்கிறோம். நாம் ஆரம்பிக்கும் இப்புதிய திருவழிபாட்டு ஆண்டு வெறும் சடங்குகளுக்குள்ளும் அர்த்தமற்ற ஆடம்பரங்களுக்குள்ளும் சிக்குண்டு அதன் உயிர்ப்பொருளை இழந்து போகாமல், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விற்கும் பொருள் தருகின்ற மீட்பின் செயல் முறையில் முழுமையாக நாம் பங்கெடுக்க எம்மைத் தூண்டுவதாக இருத்தல் வேண்டும்.

**திருவருகைக்காலம்**

மாபெரும் மீட்புத் திட்டத்தின் தொடக்க நிகழ்வாகிய இயேசுக் கிறிஸ்துவின்பிறப்பிற்காக 'ஆண்டவராகிய இயேசுவே வாரும்' எனப் பெரும் எதிர்பார்ப்புக்களோடு காத்திருக்கும் வேளையில் முன்மதியுள்ள மனிதர்களாக, எண்ணெய் நிறைந்தவிளக்குகளோடு, திருமணவீட்டுக்குப்பொருத்தமான ஆடைகளோடு எம்மைத் தயார் செய்ய இக்காலம் எம்மை அழைக்கின்றது. கோணலானவற்றை நேராக்கவும், கரடுமுரடானவற்றை சமதளமாக்கவும் காலத்தின் குரல் எம் செவியருகே நின்று சத்தமாகத் தட்டிச் சொல்லிக் கொண்டே இருக்கின்றது.

**முழுமையாக வாழப்படும் மனிதமே தெய்வீகம்**

'கடவுள் மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்' ஆண்டவர் இயேசுவின் மனுவுரு ஏற்பின் நோக்கம் மனிதன் மனிதனாக முழுமையான வாழ்வை வாழ்வதானூடாகப் படைப்பின் நோக்கத்தை நிறைவு செய்யமுடியும் என்பதை வாழ்ந்து காட்டுவதற்கானதே. மானிடப் பிறப்பு என்பது மகத்துவமானது. படைப்பின் உச்சம் கடவுள் மனிதனானதும், மானிடர் வாழும் முழுமங்களில் வாழ்வை நிறைவாக வாழ்ந்து முடித்ததும் "எல்லாம் நிறைவேறிற்று" என்று சொல்லத்தக்க முழுமனித நிறைவையே சாத்தியமாக்கி நிற்கிறது.

**இறைவார்த்தையின் ஞாயிறு பிரகடனம்**

'வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்டார்' என்னும் ஆழமான தெய்வீக இரகசியத்தை வாழ்வில் மிக நெருக்கமாகப் புரிந்துகொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக எழுந்து நிற்கிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வருகிற 2020ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் நான்காவது ஞாயிறு தினத்தை இறைவார்த்தையின் ஞாயிறாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். "அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு" (காண். உரோ.10:17). இறைமக்களுடைய நம்பிக்கைக்கும் இறை வார்த்தைக்குமிடையிலான மிக நெருக்கமான தொடர்பு காலம் பூராகவும் வாழ்வைப் பொருள் நிறைந்ததாக்கி வருகிறது.

ஆண்டவர் இயேசுவின் காலடிகளில் அமர்ந்திருந்து அவர் சொல்வதை முழுமையாகக் கேட்ட மரியாவின் மனது கொண்டு இறைவார்த்தையைத் திருப்பலியிலும், தனிப்பட்ட செபவழிபாடுகளிலும் கேட்பதும், தியானிப்பதும் மிக அவசியமானது என்பதை நாம் நன்கு உணர்ந்து இறைவார்த்தையின் வழியில் நம் வாழ்வை வாழ வேண்டும்.

எனவே அடுத்த ஆண்டில் கூடுதலாக எமது வழிபாடுகளிலும் தியானங்களிலும் இறைவார்த்தையை மையப்படுத்தி அனுசரிக்குமாறு வேண்டுகின்றேன்.

**அழைத்தல் ஆண்டு**

நடப்பாண்டை அழைத்தல் ஆண்டாகப் பிரகடனம் செய்திருந்தோம். இந்த ஆண்டில் விசேடமாக பொதுநிலையினரின் அழைத்தல் வாழ்வு குறித்து மேற்கொண்ட முயற்சிகளை இத்தோடு முடித்துக் கொள்ளுதல் என்பது பொருளல்ல. "திருச்சபை ஆட்சியாளர்களோடு கூட, எங்கு உண்மையான பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ அங்கு திருச்சபை உண்மையாகவே நிறுவப்படவுமில்லை முழுமையாக வாழப்படவுமில்லை மனிதர் நடுவே கிறிஸ்துவின் அடையாளமாகத் துலங்கவுமில்லை எனச் சொல்லலாம்." எனத் திருச்சபையின் நற்செய்திப் பணி எனும் சங்க ஏடு குறிப்பிடுவதை உணர்ந்து தொடர்ந்தும் பொதுநிலையினரின் அழைத்தலை முழு உற்சாகத்தோடு ஊக்குவித்தல் அவசியமானது. இவ்வாண்டைப் பொதுநிலையினருக்குப் பயனுள்ளதாக ஆக்கிட சிறந்த திட்டங்களோடு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**துயருறுவோர் ஆண்டு - 2020**

யாழ் மறைமாவட்டத்தில் 2020ம் ஆண்டைத் துயருறுவோர் ஆண்டாகப் பிரகடனம் செய்கின்றோம். இறைவனின் அளவுகடந்த இரக்கம் துயருறும் மனிதர் நடுவே இறங்கி அவர்களில் அது முழுமை அடைகிறது. தொலைந்துபோன ஆடுகளாக இருள் சூழ்ந்த பள்ளத்தாக்குகள் நடுவே, உயிர் எடுக்கும் முட்கள் நடுவே, மரணத்தின் பயங்கர விழிம்புகளில் வலிகளோடு துடித்துக் கொண்டிருக்கும் மனிதர்களை நோக்கிக் கடவுளின் இரக்கத்தின் கால்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

எனக்கு அடுத்திருப்பவனில் துன்புறும் இறைவனைக் காணுதல் என்பது காலத்தின் தேவையாக முளைத்து நிற்கின்றது. பாராமுகமாக அடுத்தவனைக் கடந்து போதல் எனும் கலாசாரம் எம்மைச் சூழ வலை பின்னி வருகிறது. "நான்", "எனது" என்ற சின்ன வட்டங்களுக்குள் சிக்கிக் கொள்கிற சமூகப் பிராணிகளாக நவீன வாழ்வியல் எம்மை உந்தித் தள்ளிவருகிறது. "இச்சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு எதையெல்லாம் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" (மத்.25:40) என்ற கடவுளின் குரல் நல்ல சமாரியன்களாக வாழ்ந்திட எம்மைக் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

எம் மீட்பிற்கான திறவுகோல், கசக்கி எறிந்த காகிதத்தைப்போலக் கணக்கிலெடுக்காது பணக்காரன் வீட்டு வாசலில் நாய்கள் நக்கிய புண்களோடு கிடந்த இலாசரைப்போல எம்முன இருக்கிறது. அதைப் பாராமுகமாகக் கடந்து போனால் எம் மீட்பைத் தொலைத்து விடுவோம்.

ஒரு பெரும் போர் முடிந்த நிலையில் எம் இருப்பை மீண்டும் தக்க வைத்துக்கொள்ளப் பாடுபடும் ஓர் இனத்தின் எச்சங்களாக நின்று பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எம் காயங்களும் வலிகளும் நிஜமானவை. ஆனால் எம் வாழ்வை நம்பிக்கையோடு அடுத்த தளத்தை நோக்கி நகர்த்திச் செல்வதற்கு முயற்சிப்பது மிக அவசியமானது. "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" (தொ.நூ.4:9) என இறைவன் கேட்கிறபோது எம் சகோதரர்களின் காவலாளிகள் நாம் என்பதையும், பொறுப்புக்கூறலுக்குரியவர்கள் நாம் என்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

உடல் ரீதியாக மட்டுமன்றி, உளத்தாக்கங்களால், தனிமைப்படுத்தல்களால், சமுதாயப் புறக்கணிப்புக்களால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பர ஆசைகளுக்கு அடிமைப்பட்டு நிம்மதி இன்மைகளால் தொடரும் வன்முறைப் போதைக் கலாசாரங்களின் அதீத வளர்ச்சியினால், வறுமையினால் எனப் பலநிலைகளில் துயருறும் எம் சக மனிதர்களோடு உடனிருக்கவும், நாளைக்கான புதிய நம்பிக்கையை ஊட்டவும் இக்காலம் எம்மை அழைக்கின்றது.

எல்லோருமே ஏதோ ஒரு வகையில் துயருறுபவர்களாக இருந்தாலும் வயிற்றில் தாங்கிய கருவோடு எலிசபெத்து வீடு வரை நடந்து சென்ற அன்னை மரியாவின் மனதோடு காயப்பட்ட மருத்துவனாகத் தன்னை வெளிப்படுத்தும் இயேசுவின் உண்மைச் சீடர்களாகத் துயருறுவோரின் நம்பிக்கையாக விளங்கிட இவ்வாண்டு எம்மை அழைத்து நிற்கின்றது.

எம் பங்குகளில் பல்வேறு பக்திச்சபைகளூடாக நல்ல பல திட்டங்களைத் தீட்டித் துயறுருவோரின் நல்வாழ்வுக்காக உழைக்க உங்களைப் பணிக்கின்றேன்.

**தேர்தல் முடிவுகளும் எம் நிலைப்பாடும்.**

இலங்கை நாட்டின் புதிய ஜனாதிபதிக்கான தேர்தலின் முடிவுகள் தமிழ்பேசும் மக்களின் பெரும் கனவொன்று உடைந்துபோனது போன்ற ஓர் ஏமாற்ற உணர்வை உண்டுபண்ணுவதாகவே தெரிகிறது. நாம் ஒரு போதும் உடைந்து போகவோ, சோர்ந்து போகவோ கூடாது. கடவுள் கோணலான கோடுகள் நடுவே அழகான சித்திரங்களை வரைய வல்லவர் என நம்புவோம். "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37) என்பது நாள் காலங்களையெல்லாம் தாண்டிய நம்பிக்கையின் செய்தியாக எமக்குத் தரப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இந்தத் தேர்தலில் தமிழ்பேசும் மக்கள் வெளிப்படுத்திய ஒட்டுமொத்தத் தீர்மானம் ஒரு பெரும் வெற்றியாகும். இந்த ஒற்றுமையின் பலம் ஒரு தேசிய இனமாக ஜனநாயகத்தின் தளத்தில் நாம் நிலைகொள்ள மிகத் தேவையானதும் ஆகும். இறைவன் நல்லவர், நன்மையையே எம் நாட்டுக்குச் செய்வார் என்பதே எமது நம்பிக்கை ஆகவேண்டும.

அடுத்த தேர்தலுக்கான களங்கள் தயாராகி வரும் நிலையில் நம்பிக்கையோடு தொடர்ந்தும் எமது சரியான தெரிவுகளை மேற்கொண்டு அமைதியான வளர்ச்சி நோக்கி மேலெழுகின்ற [illegible] நாட்டை, எம் வாழ்வைக் கட்டியெழுப்ப [illegible]பதும் செபிப்பதும் எமது கடமையாகும்.

**நிறைவாக**

இறை இயேசுவில் ஆழமான நம்பிக்கை கொண்ட இறைமக்களாக, மணல் மீது கட்டப்பட்ட வீடுகளைப் போல் அல்லாது மலைகளின் மீது கட்டப்பட்ட வீடுகளாக எமது மனங்களை விசுவாசத்தில் ஆழப்படுத்தி, பிறர் அன்பில் நிலைத்திருந்து துயருறுவோருக்கு ஆறுதல் கொடுப்பவர்களாக எமது வாழ்க்கைப் பாதையை வளப்படுத்துவோம்.

பிறக்க இருக்கும் பாலன் இயேசு எம்மை வழிநடத்துவாராக! அன்னை மரியின் பரிந்துரை எமது அனைத்துப் பணிகளிலும் துணையிருப்பதாக!

கிறிஸ்துவிலும் மரி அன்னையிலும் பக்தியுள்ள

[signature]

பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்
யாழ் மறைமாவட்ட ஆயர்

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,
01.12.2018

## இலண்டன் ஆன்மீக பணியக இயக்குநரும் வேர்கள் சஞ்சிகையின் ஆசிரியருமான அருட்பணி.எல்மோ அருள்நேசன் அடிகளாரின் நாவிலிருந்து...



**கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே!**

கிறிஸ்து பிறப்பின் நல்வாழ்த்துக்களையும் புதுவருட ஆசீர்வாதங்களையும் மகிழ்வுடன் முதலில் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இறைபணியில் என்னுடன் கரம் கோர்க்கும் அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிக்கும் வருடயிறுதி இது. எமது பணி எப்பொழுதும் கூட்டுறவையும் ஒருங்கிணைப்பையும் கொண்டதே. உங்கள் இறைநம்பிக்கையும் கடின உழைப்புமே எமது பணியிலே முடியாததாக தோன்றுபவற்றை வாய்க்கப் பண்ணுகின்றது.

எனவே எனது அலுவலக உதவியாளர்,நிதிக் குழு உறுப்பினர்கள், இயக்குநர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், ஒவ்வொரு பணித் தளத்திலும் சில பணிகளுக்குப் பொறுப்பானவர்கள், உறுப்பினர்கள் மற்றும் இறைமக்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக.

புதிய ஆண்டு புதிய நம்பிக்கையைத் தரும், மேலும் இது எங்கள் பணியகத்துக்கும் புதிய முயற்சிகளைத் திறக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். நான் எனது மூன்றாம் ஆண்டை பணியகத்தில் தொடங்குகிறேன், கிறிஸ்துவில் உங்களுக்கு பணி செய்வதற்கான ஒரு அரிய வாய்ப்பு இது.

உங்கள் உள்ளூர் பங்குகளில் நீங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் நினைவில் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு சமூகமாக உங்கள் ஆன்மீக பயணத்தில் இது மிகவும் முக்கியமானது. உங்களுக்கு தமிழ் மொழி திருப்பலி மற்றும் வழிபாடுகளை வழங்குவதற்கும், உங்களுக்குத் தேவையான எந்தவொரு உதவியையும் நாங்கள் நிறைவேற்றுவதற்கும் உறுதியளித்திருக்கிறோம். இருப்பினும் இங்கிலாந்து குடிமக்களாக நீங்கள் உங்கள் உள்ளூர் பங்குகளில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். தயவுசெய்து அருகிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்திற்குச் சென்று, பங்குத் தந்தையை சந்தித்து, உங்களைப் பதிவுசெய்து, தவறாமல் பங்கு செயற்பாடுகளில் கலந்துகொண்டு பங்கு சமூகத்துடன் இணைந்து வாழுங்கள். ஆயர் ஜான் வில்சன் நவம்பர் மாதம் நொட்டிங்கில் புலம்பெயர் ஆன்மீக இயக்குனர்களை சந்தித்தபோது இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

2020 புதிய ஆண்டு நல்ல செய்திகளைக் கொண்டு வந்து பரலோக ஆசீர்வாதங்களைத் திறக்கும். எங்கள் தூய அன்னை மரியாவின் பரிந்துரையின் கீழ் ஒரு நம்பிக்கையைத் தேடும் சமூகமாக நாம் வளர்வோம்.

**கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேர்ச்சஞ்சிகை பற்றிய விமர்சனக் கண்ணோட்டக் களப்பக்கம்

## சமூகத்தை விழிப்படைய வைத்துள்ள விந்தையான, விழிகளை உயர்த்தி விழிப்படைய வைத்த சமூகக் கருத்துக்கள்

## வேர் மரமாக உரமான உங்களையும் உள்ளத்தில் நன்றியுடன் நினைத்து .......

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எழுத்தாளர்கள், பெருந்தகைகள் ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றி.,

இச்சஞ்சிகையைத் தரமாக்குவதற்கு ஒத்துழைத்த மதிப்புக்குரிய ஆய்வாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிச் சிறப்பாக இச் சஞ்சிகையை சமூகமாகிய எம்மிடம் கையளித்த எமது அன்புக்கும், வணக்கத்துக்குரிய பணியக இயக்குநர் ஆசிரியர் அருட்பணி ஜெ .எல்மோ அருள்நேசன் அவர்களையும் நன்றியுடன் நினைக்கின்றோம்.

மற்றும் இவ்வேர்ச்சஞ்சிகையை ஆரம்பித்துவைத்த ஆரம்பகர்த்தாவாகிய அருட்தந்தை எஸ்.ஏ. எயின்சிலி றொஷானையும் நன்றியுடன் நினைக்கின்றோம் மற்றும் இதற்கு ஒத்துழைத்த அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள் இவை அனைத்தையும் ஆக்கமாக்க, அருள்பாலித்த ஆண்டவனின் பாதங்களைப் பணிந்து, எல்லாப் புகழும் அவனுக்கே என நன்றியுடன் காணிக்கையாக்குகிறோம்.

வேர்க்குழு
இலண்டன்

## வேர்ச்சஞ்சிகைக்கான ஆக்கங்களும், ஆக்கபூர்வமான விமர்சனங்களும்,

அன்பான உறவுகளே ,

உங்களின் ஆக்கங்களையும், ஆக்கபூர்வமான ஆழமான அனைத்துக் கருத்துக்களையும், எழுதி வெளியிட, வேர்ச்சஞ்சிகைக் குழுவினர் களம் அமைத்துத் தந்துள்ளனர். சமூகத்தில் மாற்றங்களை மாற்றுவதற்காக,நாம் ஒவ்வொருவரும் மாற, எங்கள் சாளரங்கள் எப்போதுமே, உங்களுக்காகத் திறந்தே வைக்கப்பட் டுள்ளது. உங்களின் ஆக்கபூர்வமான சிந்தனைத்துளிகள் வேர்ச் சஞ்சிகையின் தரத்தை உயர்த்தி, வாழ்வோடு வழிபாடு பின்னிப் பிணைந்து, பயணிக்க, வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றவே, இச்சஞ்சிகையானது உருவாக்கப்பட்டது. இச்சஞ்சிகையானது உயரிய குறிக்கோளுக்கேற்ப, இந்த உயரிய ஒரே குறிக்கோள் ஒளி வீச, ஒவ்வொருவரும் உழைப்போம் என உறுதி எடுப்போம்

**தொடர்புகளுக்கு –**

**ஆசிரியர் -அருட்பணி ஜெ .எல்மோ அருள்நேசன்**


வேர்ச் சஞ்சிகையின் நிர்வாக ஊடகத் தொடர்பாடல்கள்
இயக்குநர் ஆசிரியர்
அருட்பணி ஜெ.எல்மோ அருள்நேசன்
மின்னஞ்சல்: verkalgb@gmail.com

## வேர்ச்சஞ்சிகைக்கான பணியக ஆணையம்

Thires Mariyathas,
Laxthana Queentas,
NoielineMariabalanayagam

**வேர்ச்சஞ்சிகைக்கான பணியக ஊடக ஆக்கங்கள் சேகரிக்கும் ஊடகத் தொடர்பாடல்கள் –**

1-Earlsfield-Mr.Philipiah Romalojoseph
2-Wallingtan-Ms.Anisha - Harridas
3-Chingford-Mr.Vctor sivagunam
4-Southall-Mrs.Dorin Iruthayarajah
5-Kenton.Mr.Amalathas
6-Gantshill-Mr.mitula julias
7-Eastham-Mrs.Ignatios Thaya Charles
8-Coventy-Mr.Jackson
9-Wembley-Mr.Rajeev .Selvanavagam
10-Leicester-Mr.Johnson Fernando
11-Lewshiam-Jothy
12-Milton Keynes--Jacqulin
13-Southend On Sea-Mrs.Grace Genova Anton




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காக கம்போடிய அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தனது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணிகள் மூலம் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காகக் கம்போடிய அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கம்போடிய நாட்டின் சியாம் ரீப் நகரில் செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கம்போடிய அரச கலை கலாசாரத்துறையுடன் இணைந்து பன்னாட்டு தமிழர் நடுவம் மற்றும் அங்கோர் தமிழ் சங்கம் நடத்திய உலகத் தமிழ் கவிஞர் மாநாடு நடைபெற்றது. இதில் மலேசியா சிங்கப்பூர் இந்தியா இலங்கை டுபாய் அவுஸ்திரேலியா நோர்வே போன்ற உலநாடுகளில் உள்ள தமிழ்க் கவிஞர்கள் எழுத்தாளர்கள் படைப்பாளிகள் என ஏறக்குறைய 200 பேர் இந்தியா மலேசியா இலங்கை சிங்கப்பூர் மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளிலிருந்து வந்து கலந்து கொண்டு விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

உலகத் தமிழ் கவிஞர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தமது 12 ஊடகவியற் புத்தகங்கள் மற்றும் ஊடகவியற் பணிகள் மூலம் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பிற்காகக் கம்போடிய அரச விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அங்கோர் தமிழ் சங்க தலைவர் திரு சீனிவாச ராவ் செயலர் திரு ஞானசேகரன் துணைத்தலைவர் திரு இராமேஸ்வரன் பன்னாட்டு தமிழர் நடுவத்தின் தலைவர் சித்த மருத்துவர் திரு தணிகாசலம் சீனுஞானம் பயண ஏற்பாட்டாளர் திருமதி தாமரை சீனிவாச ராவ் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற உலகத் தமிழ் கவிஞர் மாநாட்டில் கம்போடிய அரச கலை கலாசாரத்துறை அமைச்சக இயக்குநர் திரு மோன் சுயப் சொக் காய் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இங்கு சிறப்பம்சம் என்னவென்றால் கம்போடிய அரச அரச கலை கலாசாரத்துறை அமைச்சக இயக்குநர் திரு மோன் சுயப் சொக்காய் தமிழ்மொழியைப் பேச முடியாதவராக இருந்த போதிலும் இரண்டு நாட்களும் முழு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார்.

கம்போடிய அரசின் மேலான ஆதரவுடன் அங்கோர் தமிழ்ச்சங்கம் ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற தமிழுக்கான பெருமுயற்சிகளைச் செய்து கொண்டே இருக்கிறது.

# Christmas



God became human to save us from sin,
On Christmas Jesus was born.
God took on the limitations of a human for us.
God showed his love to us.

Jesus was born by Mary,
She was the mother of God.
The shepherds and the wise men were the first to see,
They were the first people to see God.
The creator of the universe came to save us from sin

*By Dayanshan Romalojoseph*
*Earlsfield Mass Centre*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலன் இயேசு இன்றும் அவர்



டிச் செல்ல
பெருகி வர
ன்பு தொடர்ந்து வர

சூது கவ்வ

...ளரின்
...ம்
குன்றுகள்

...ளையப்பட்டு
...ழிக்கப்பட்ட
...யிர் ஒன்று
... ந்தரத்தில்

...) அவமானத்தின்
...ங்கள்
...திமிடப்பட்டது
...தப்பட்ட குருதியில்

உன்னதரின்
உயிரிழையில்
நேற்றும் இன்றும்
நாளையும் என்றும்.
எழுதிய முடிவு
எழுதப்பட்டுக் கொண்டது

இறுதி காட்சிகளின்
இறுதிக் காட்சி
சிலுவையின் அடியில்
தூயவள் மடியில்...
ஆனால்
அவரின் தொடக்கம்....

அதுவும் எளிதாயில்லை
இடப்பெயர்வு.
கடும் குளிர்.
கெடுபிடி.
நீண்ட தூரப் பயணம்.
சோர்வு. களைப்பு
இன்னும் ஏராளம்

கருவுற்ற உயிரொன்றை,
வயிற்றிலே சுமந்தபடி
தாயும்
தந்தையும்

பேறு காலம்
அந்த நேரம்....
பெரும் சிரமத்தின் மத்தியிலே...
மாட்டுத் தொழுவமொன்றிலே
மாமகன் மனுமகன்
பாலன் பிறந்தார்.

விண் மீன்கள்
கண் சிமிட்ட
இடையர்கள்
மெட்டமைக்க
தேசத்தின் புதல்வனவர்
புன்னகையால்
பூச்சொரிந்தார்

மூவிராசாக்கள் வந்து
வணங்கிச் சென்ற
ராஜாதி ராஜனவர்

ஈற்றில்....
ஆண்டுகள் ஓடிச் செல்ல...
அற்புதங்கள்....
கடைசிக் காட்சி....

இப்பொழுதும்
அன்னையவள்
மடியில்....
அகிலமது கண்ணீர்
மலையில்....

இயேசு!
இறந்தார்
மறுபடியும்
பிறந்தார்...
இன்றும் அவர் எங்களுக்காய்
ராஜாவாக..

த.ஜெயசீலன்
சவுத்தோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Why is the role of Baby Jesus crucial to the Catho

Annually at Christmas, we reminisce how Jesus set foot into this world as a helpless and defenceless infant in a humble manger. However, we habitually overlook the genuine threats that encircled his birth. Jesus wasn't born in a sanitary hospital, but in an unhygienic stable where animals slumbered. And what about Jesus' enemies? When Herod ascertained about this infant king, he was tenacious to eradicate his adversary at any cost. As it happens, Satan himself endeavoured to annihilate Jesus on more than one circumstance. With numerous intimidations to Jesus' life, we may ponder why God didn't circumvent the manger and send Jesus to earth as a fully-fledged adult, a few weeks prior to undertaking the cross. With that approach, Jesus could still die on the cross for our immoralities, whilst evading all the agony and complications of a distinctive human life. Thus, why was it majorly imperative that Jesus be born, and live an absolute life prior to the cross?
The Bible conveys at least 3 significant answers:

1.) Jesus came to live the flawless life we needed. When Jesus requested to be baptised, John the Baptist was shocked (Matthew 3:14). Nevertheless, Jesus persisted vindicating that his baptism would "fulfil all righteousness" (Matthew 3:15). In other words, Jesus was doing what was right in God's eyes. Thankfully, Jesus would proceed to do right his whole earthly life. Scripture says Jesus grew up physically, socially and spiritually (Luke 2:52) — so that he will execute the undertaking of liberating sinners and restoring them to God. At every point in life where sinners were unsuccessful, Jesus prospered. By living the perfect life, Jesus established the righteousness we obliged to be acknowledged by God. When we trust in Jesus, God exchanges our sin for Jesus' seamless virtue (2 Corinthians 5:21). Therefore, it wasn't solely Jesus' death that saved us — it was his perfect life, too. This is why Jesus lived those 33 years, which lengthened from Bethlehem to Calvary. He did all the exertion, but those who trust in him get all the recognition.

2.) Jesus came to taste our human experiences. It's not rare for



miserable people to say, "You just don't understand." But Jesus understands. As well as being the Son of God, he is likewise 100% human in every respect. Like us, Jesus experienced fatigue (John 4:6), hunger (Matthew 4:2), thirst (John 4:7), anxiety (Luke 22:44) — and even back-stabbing friends (John 13:27). Since Jesus lived a complete life, he comprehends our conflicts and commiserates with our burdens. Scripture says, "We have one who has been tempted in every way, just as we are — yet he did not sin. Let us

then approach (
grace with con.
may receive me
to help us in ou
(Hebrews 4:15-
"been there," an
aid us.

3.) Jesus came t
for us to admire
the initial time y
Christmas gift? L
somebody had to
to do it rightly. Th
additional reason
full life on earth: t
to live for God. Lov
neighbour, showing t
to the undeserving, and h
God's Word — Jesu
taught these things a
he exhibited them, to
His notable life was no
simply for our observing preference, like toys in a Christmas catalogue, but for "an example, that you should follow in his footsteps" (1 Peter 2:21). If we want to make our lives count for perpetuity, there is no worthier example than the life of Jesus Christ. Christmas is merely just a few weeks away, and everywhere we glimpse we see adorned nativity scenes. Wooden, plastic, or ceramic — every scene has a manger in the middle, where the baby Jesus reposes. This year, let's remind ourselves that although Jesus started in the manger, he didn't remain there. We should be exceedingly beholden that Jesus embraced the challenge — from the cradle to the cross.

By Yananshika Kumarathas
Wallington Youth

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபவாழ்வும் தியானமும்

அன்பான கிறிஸ்தவர்களே! செபம் முக்கியம் மனம்தளராமல் எப்போதும் செபிக்கவேண்டும் (லூக்.18.1) நீங்கள் சோதனைக்குட்படாதபடி செபியுங்கள். (லூக்.22. 40) இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். (1தெச.5:17) கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும். (மத்.7.7)

எங்களுக்கு என்ன தேவை இருக்கிறதோ அதை நாங்கள் உருக்கமாக கேட்க வேண்டும். விசுவாசத்துடனும் இறை நம்பிக்கையுடனும் நாம் அவரிடம் கேட்க வேண்டும். நாம் ஆசைப்படுவதை ஏன் அடைய முடியவில்லை? இறைவனிடம் கேட்காததால்தான். கேட்டாலும் ஏன் அடைவதில்லை? தீய எண்ணத்தோடு கேட்பதாலேயே (யாகப்பர்.4:3).

**அன்பான கிறிஸ்தவர்களே!**

நாம் புறப்பட்டு வெளியுலகில் நடமாடும் போது தெருக்களிலும், வீடுகளிலும், தொழில்துறைகளிலும், அலுவலகங்களிலும் எத்தனையோ மக்களைச் சந்திக்கிறோம், இவர்களுள் இறைவனைத் தேடுபவர் எத்தனை பேர்? உத்தம கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைக்கிறவர்கள் கூட நமது அன்புத் தந்தையை அவர் நிமித்தமாக அன்பு செய்கிறவர்கள் எத்தனை பேர்? தங்கள் ஆத்துமங்களாகிய தோட்டத்தில் புண்ணியங்கள் என்னும் நற்கனிகள் கொடுக்கிற பக்தி உள்ள விசுவாசிகள் எத்தனை பேர்? நாடெல்லாம்



பாழாய்ப் போய் விட்டது என்று மெய்யாகவே சொல்லலாம் ஏனெனில் அநேக இதயங்கள் கனி கொடாமல் வறண்ட நிலங்களுக்கு ஒப்பாகின்றன. அநேகருடைய இதயங்களில் இறையன்பு அற்றுப்போய் விட்டது.

அன்பான கிறிஸ்தவர்களே! உலக மாந்தர் ஒவ்வொருவரும் சற்று வேளையாகிலும் ஊன்றிச் சிந்திப்பார்களேயானால் ஒரு போதும் கடவுளை மறக்கமாட்டார்கள். அவருக்கு எதிராகப் பாவம் செய்ய முற்படமாட்டார்கள். தன் பாவங்களுக்காக அவருடைய ஒரே பேறான மகன் பட்ட கொடிய பாடுகளையும் மரணத்தையும் தியானித்துப் பார்க்கிறவன் பின்னும் பாவத்தை விரும்புவானோ? உள்ள படியே தியானம் செய்து வருபவன் நிச்சயமாகப் பாவத்தை விலக்கிக் கொள்வான்.



அன்பான கிறிஸ்தவனே கிறிஸ்தவளே! நீங்களும் பாவத்தை விலக்கிப் புண்ணியத்தையே எப்போதும் செய்ய உமக்கு ஆவல் உண்டு. அந்த நல்லாசையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறாயா? அதற்கு ஒரே வழி தியானம். ஆனால் அநேக பயபக்தியுள்ள கிறிஸ்தவர்கள், பரிசுத்த தனத்தின் உச்ச நிலையை அடைய விருப்பமிருந்தும், தியானம் செய்ய விரும்பினாலும் அதற்கு வேண்டிய நேரமும், வசதியும் அவர்களுக்குக் கிடைக்காமல் போகிறது. இருப்பினும் ஒரு சுருக்கமான முறையில் தியானம் செய்யும ஒழுங்கை அன்பர்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. தியானத்தை தொடங்கும் முன்னே இறைவனின் திருமுன் இருப்பதாக நினைத்து உன்னைத் தாழ்த்திக் கொள். அவரின் ஞான வெளிச்சம் தேவை.

இறை ஒளிக்காகத் தூய ஆவியானவரின் செபம், அல்லது தியானப் புத்தகத்தை அமைதியாக, ஆறுதலாக, வாசித்து மனதிற்பதியக்கூடிய இடங்களில் தரித்து நின்று, ஐம்புலன்களை அடக்கும் வகையில், கண்களை மூடிக் கொண்டு ஆத்துமத்தின் ஞானப் பற்றுதல்களுக்கு இடங்கொடுக்க வேணும். இறைவனோடு பேசுவதற்கு எந்த இடத்தில், அல்லது எந்த விடயத்தில் மனது அதிகமாய் ஈர்க்கப்படுமோ, அந்த இடத்தில் அந்த விடயத்தைப் பற்றி அவரோடுபேசு. ஆண்டவரே பேசும், உமது அடியான் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லு. தியானத்தில் ஒரு நல்ல யோசனையை நல்ல நினைவை எடுத்துக் கொள்ள வேண்டும். உத்தமமான பழக்கம், அந்த நினைவு நாள் முழுவதிலும் நாம் செய்யும் செயல் அனைத்திலும், பிரதி பலித்து அவைகளை புனிதப் படுத்த வேண்டும்.

தியானம் செய்ய வேண்டிய நேரத்தைக் குறித்துக் கூற வேண்டுமாயின், நித்திரை விட்டெழும்பிய காலை நேரம் உகந்தது. பிற சிந்தனைகள் மனதிற் புகுந்து நமது சிந்தனைகளைக் குழப்பும் முன், இறை சிந்தனைக்கு இடங்கொடுப்பது சாலச்சிறந்தது. எனினும் காலை நேரத்தில் நேரம் இல்லாதவர்கள், வேறு எந்த அமைதியான நேரத்திலும் செய்யக் கொள்ளலாம். மற்றும் உடல் நிலை பற்றிக் கூறவேண்டுமாயின், கதிரையில் உட்காருபவர்கள் நிமிர்ந்து இருந்து இரு கைகளையும் நெஞ்சில் வைத்த படி, கண்களை மூடிக்கொண்டு தியானித்து வீண்பராக்குகளைத் தவிர்ப்பது சிறந்தது. நிலத்தில் உட்காருபவர்கள் இரத்த ஓட்டம் தடைப்படாத வகையில், இலகுவான உடல் நிலையைத் தெரிந்து கொள்ளுதல் சிறந்தது. குனிந்த, நெளிந்து சரிந்து இருப்பதை விடுத்து உடலை நேரே வைத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டு தியானிப்பது சிறந்த முறையாகும்.

**பவளமேரி சாள்ஸ்,**
Milton Keynes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமணபந்தத்தின் மாண்பை மதியுங்கள்"



திருமதி. சுந்திரசேகரா.
இளைப்பாறிய ஆசிரியர்
(Gantshill Tamil Mass Center)

கடவுளால் மனிதருக்கு என ஏற்படுத்தபட்ட சிறந்த ஒழுங்குமுறை திருமணமாகும். நாம் ஆண்டவருக்கு மதிப்பு மரியாதை கொடுக்க வேண்டுமென்று ஆசைப்படுவதுபோல் அவரால் ஏற்படுத்தப்பட்ட மேலான பந்தமாகிய திருமணத்தை நாம் மதிக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். ஏனெனில் ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்து "பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" (தொட 1: 28) என்றார். இதுவே அவரது நோக்கமாக இருந்தது. இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். "இருவரும் ஒரே உடலாய் இருப்பர்". (தொட 2:24) என்று மணவாழ்வின் மாண்பினை வலியுறுத்துகிறார்.

"மேலும் திருமண பந்தத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள் மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும்" (எபிரே 13:40) என்று கூறும் அப்போஸ்தலர் பவுல் திருமணத்தைப் பற்றிய ஒரு பொதுவான கருத்தைச் சொல்லவில்லை. அதன் புனிதத் தன்மையைப் பாதுகாத்து பொக்கிசமாகப் பேணுவது
டன் மாண்புடன் மதிக்கவேண்டும் என்று ஆணித்தரமாக அறிவுறுத்துகிறார்.

பரிசேயர் திருமண விலக்குப் பற்றி இயேசுவிடம் கேட்டபோது "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" என்று பதிலளித்தார் (மாற்கு 10:9-11) எனவே திருமண பந்தத்தை ஆண்டவர் ஆரம்பித்து வைத்தார் என்பதையும் அது ஒரு நிரந்தர பந்தம் என்பதையும் இயேசு ஏற்றுக் கொண்டார் என்பதைக் காண்கிறோம். முதற் கல்யாணத்தை ஆண்டவர் ஆரம்பித்து வைத்தபோது விரும்பினால் விவாகரத்துச் செய்யலாம் என்று அவர் ஆதாம் ஏவாளிடம் சொல்லவில்லை. ஏனெனில் இருவருமே திருமணபந்தத்தில் நிலைத்திருந்து சந்தோசமாக வாழவேண்டும் என்று விரும்பினார். அதுதான் நியதி என்பதை உணர்த்தினார்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் தலைவர் ஆண் ஆணுக்குத் தலைவன் கிறிஸ்து கிறிஸ்துவுக்குத் தலைவர் கடவுள்! (1கொரி11:3) கிறிஸ்துவுக்குக் கடவுள் தலைவராக இருந்தாலும் அவர் இயேசுவிடம் சுயனலமில்லாத அன்பு காட்டித் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார். இயேசுவும் ஆண்டவரின் அதிகாரத்திற்கு மதிப்புக் கொடுத்தார். எனவே கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் சுயநலமில்லாத அன்பும் மதிப்பும் காட்ட வேண்டும் என்பதற்கு இவர்கள் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் பேதுரு தனது 1ம் திருமுகத்தில் எழுதிய ஆலோசனைகளைக் கவனிப்போம். " திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள். அவர்களுட் சிலர் கடவுளுடைய வார்த்தையை ஏற்காதிருந்தாலும் மரியாதையுடைய உங்கள் தூய நடத்தையைக் கண்டு கவரப்பட்டு நல்வழிப்படுத்தப்படுவர்." (1பேதுரு 3:1,2) என்று பெண்களுக்கு அறிவுறுத்துவதுடன், ஆண்களுக்கான ஆலோசனைகளையும் தருகிறார். " திருமணமான ஆண்களே, உங்கள் மனைவியர் வலுக்குறைந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களோடு இணைந்து வாழுங்கள். வாழ்வுதரும் அவர்களுக்கு உடன் உரிமையாளராக இருப்பதால் அவர்களுக்கு மதிப்புக் கொடுங்கள்" (1பேதுரு 3:7) கிறிஸ்து கடவுளின் சித்தத்தை சிரமேற்கொண்டு செயற்பட்டார். எனவே நாமும் ஆண்டவரான யேசுவிற்குப் பிரியமாக நடந்து முழு மூச்சோடு அவரின் அலோசனைகளின் படி செயற்படும்போது இல்வாழ்வு பூத்துக்குலுங்கும் பூங்காவாக மிளிரும் என்பது திண்ணம்.

## வால்வெள்ளியாக வழிகாட்டும்...

பாருலகில் பாவமதில் மூழ்கியுள்ள
மானிடரின் வாழ்வில்
மாற்றங்களை ஏற்படுத்த நீரும்
அன்னை மரி உதரமதில் மனுவுருவானீர்

வறுமையிலும் நோயிலும்
வலுவிழந்த எம்மவர் வாழ்வில்
அருள் ஒளியாகி வழிகாட்டி
வாழ்வளிக்க வையகம் வந்தீர்

ஆடம்பர மோகத்தால் அலைமோதி
அழிவின் குழிகளைத் தோண்டி
ஆழத்திற்கே சென்றிட்ட மானிடரை
மீட்டெடுக்க நீரும் மனிதனாய் வந்தீர்

புண்ணியன் உம் வரவால்
பூமி பொலிவுறட்டும்
துன்ப துயர் விலகியே
இன்னல்கள் அகன்றிடட்டும்

மாற்றங்கள் காண விழைகின்ற
மாறுபட்ட உலகிற்கு விடுதலை வழங்கி
வால்வெள்ளியாக வழிகாட்டி நீரும்
வந்து பிறந்திடும் பாலகனே

சேரஞபன் அருள்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலன் பிறந்தார், பாலன் பிறந்தார்,



பாலன் பிறந்தார் பாலன் பிறந்தார் மானிட மகனாகப்
பெத்தலேகேமில் பாலன் பிறந்தார்

தாவீது ஊரில் தாசர்கள் வாழ்த்த
அன்னை மரியின் மடியில்
இயேசு பாலன் பிறந்தார்

தொடக்கத்தில் இறைவன் வாக்குக் கொடுத்தார்
அந்த வாக்கின் கருணையால் இவ்வுலகில்
மானிடமகன் பாலன் பிறந்தார்.

வானவர் கீதம் பாட இடையர்கள் வாழ்த்துப் பாட
மானுடர் கூடி மகிழப் பாலன் பிறந்தார்

குடிலில் பிறந்தார் கொஞ்சும் மொழியில் பிறந்தார்
குழந்தையாக நமக்கு பாலன் பிறந்தார்

பஞ்சு மெத்தையில் பிறக்கவில்லை
அவர் பல்லாக்கில் பிறக்கவில்லை
மேய்ப்பர்கள் புடைசூழப்
பார்போற்றும் பாலன் பிறந்தார்

கொட்டும் பனியிலும்
கடும் குளிரிலும் பட்டாடை இல்லை
படுக்க இடமில்லை
மந்தைகள் உண்ணும் தீவனத் தொட்டியில்
பரமன் இயேசு பாலன் பிறந்தார்.


இருளில் இருந்த மக்கள் பேரொளிகாண
அடிமை வாழ்வின் தளைகளைக் களைய
விடியலின் மன்னனாம்
அமைதியின் அரசனாம்
மகிமையின் தேவனாம் பாலன் பிறந்தார்.

..வென்று நீ அழுவது எமக்கன்றோ
..ந்தற்கன்றோ மனுவுருதரித்தீர்
..ப்புவியில் இறையன்பில் இணைத்திட
..ன் உருவாலே பாலம் அமைத்து
..யன்னையின் மகனாய்
..ழுக்குலத்தின் மைந்தனாய் பாலன்பிறந்தார்.

..றைவன் உரைத்த வாக்குப் பலித்தது
அ..த இரவில் இறைமகன் இயேசு பாலன் உதித்தார்
ம.. மகிழ்வோடும் மன நிறைவோடும் மனிதகுலம்
செ..த்திட மகிழ்ச்சியுடன் பாலன் பிறந்தார்

Rebekka Lenus Prabakaran – Earlsfield

# திருத்தந்தை பிரான்சிஸ் அருள்பணி வாழ்வில் 50 ஆண்டுகள்



இவ்வாண்டு டிசம்பர் 13ம் திகதி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருட்பணியாளராக அருட்பொழிவு பெற்றதன் 50ம் ஆண்டு நிறைவு சிறப்பிக்கப்படுவதை யொட்டி, நவம்பர் 4ம் திகதி அவரது உருவங்கள் பதிக்கப்பட்ட இரு தபால் தலைகளை, வத்திக்கான் தபால் துறை வெளியிட்டுள்ளது.

1969ம் ஆண்டு, டிசம்பர் 13ம் திகதி, அருட்பணியாளராக அருட்பொழிவு பெற்ற இளையவர் ஹோர்கே மாரியோ பெர்கோலியோவின் மகிழ்ச்சி நிறைந்த ஓர் உருவம் முதல் தபால் தலையில் பதிக்கப்பட்டுள்ளது.

இந்த உருவத்திற்குப் பின்னணியில், இளையவர் பெர்கோலியோ தன் அழைப்பை உணர்ந்த புனித யோசேப்பு பசிலிக்காவின் உருவம் ஒரு புறமும், அருள்பணி பெர்கோலியோ அவர்கள் மிகுந்த பக்தி கொண்டிருந்த முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னை மரியாவின் உருவம் மறுபுறமும் வரையப்பட்டுள்ளன. இரண்டாவது தபால் தலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உருவம் முன்னிலையிலும், புனித பேதுரு பசிலிக்கா மற்றும் இறை இரக்கத்தின் கிறிஸ்து ஆகிய உருவங்கள் பின்புலத்திலும் வரையப்பட்டுள்ளன.

1936ம் ஆண்டு, டிசம்பர் 17ம் திகதி பிறந்த ஹோர்கே மாரியோ பெர் கோலியோ, தன் 33வது வயதில் அருட்பணியாளராகவும், 56வது வயதில் ஆயராகவும் அருட்பொழிவு பெற்று, 2013ம் ஆண்டு, தன் 77வது வயதில் திருஅவையின் தலைவராகப் பொறுப்பேற்றார். 83 வயதான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசு சபைத் துறவியாக 61 ஆண்டுகளையும், ஓர் அருட்பணியாளராக, 50 ஆண்டுகளையும் நிறைவு செய்துள்ளார்.

# பாரெங்கும் போற்றும் பாலகன்

குவிந்தன வெண்பனி
குடிலுமோ குளிர்ந்தது
கூடினர் இடையரும்
கரங்களும் குவிந்தன
புவிக்கோர் அரசராய்
பாலகன் இயேசுவும்
பொன்னிற வைக்கோலில்
புதுமைகள் புரிந்தார்
செவிதனில் சேர்ந்தே



செய்தியும் பறந்தன
சத்திய தேவனை
சொத்தெனக் கண்டனர்
கவின்கலை நிறைந்த
கண்களும் ஒளிர்ந்தன
கரங்களைக் குவித்தும்
கணமெலாம்
வணங்குவோம்

கலைமாமணி:கே.ஆர்.திருத்துவராஜா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவாசத்தில் இளையோர் இனியவர்கள்.**

இன்றைய இளைஞர்கள்தான் நாளைய தலைவர்கள். இவர்கள் இல்லறத்திற்கு, துறவறத்திற்கு, சமுதாயத்திற்கு, நாட்டிற்கு என ஒவ்வொரு துறைக்கும் அழைக்கப்படுகின்றனர்.

எனவே இவர்கள் தங்களுடைய அழைப்பின் பொருளைக் காண வேண்டிய இடம் தன்னுடைய விசுவாச வாழ்வில்தான். உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே. "வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே" என்று நீ சொல்லக் கூடிய துயர நாட்களும், ஆண்டுகளும் வருமுன் அவரை உன் உள்ளத்திலே நினை என்று (சபை உரையாளர் 12:1….) சபை உரையாளர் புத்தகத்திலே கூறப்பட்டது போல, நீங்கள் இப்போதே உங்களைப் படைத்தவரை அறியுங்கள். உங்கள் வாழ்வின் பொருளை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்விலே துன்பங்கள் வந்து சூழ்ந்து கொள்ளுமுன் உங்களைப் படைத்தவரைப் பற்றி திருவிவிலியத்திலே அறியுங்கள். இவ்வுலகமும் இவ்வுலகத்திலே உள்ள அனைத்தும் செயலிழந்து போகுமுன் உங்களைப் படைத்தவரை உள்ளத்தில் நினையுங்கள்.

திருவிவிலியத்தில் உங்கள் வாழ்வின் பொருளைக் கண்டு கொள்ளாத இளையோராகிய நீங்கள் அதை வாசிப்பதற்கே விரும்பமாட்டீர்கள். இன்று இப்புலம் பெயர் மண்ணில் வாழும் ஒவ்வொரு இளைஞனும் தான் விரும்பியபடியே வாழ்வை வாழத் தொடங்குகின்றான். சில மணி நேரக் கல்வியைத் தவிர, பல மணிநேரம் சமூக வலைத்



# இளையோரே விசுவாச வாழ்வில் தொலைந்திடாதீர்கள்...

தளங்களில் தங்களது நேரங்களைச் செலவிடுகின்றனர். இவ்வுலகம் சார்ந்த பல விடயங்களில் கவலை கொண்டு வாழும் போது அவன் தனது விசுவாச வாழ்வைத் தளர்வடையச் செய்கின்றான். மண்ணுலக ஆசைகளை நிறைவேற்ற படாத பாடுபடுகின்றான். இவ்வாறு வாழும்போதுதான் திருவிவிலியத்தில் வாழ்வின் வழியை பொருளைக் கண்டுணராமல் வாழ்கின்றான். இவ்வாறு வாழும் இளைஞர்களை எவ்வாறு நாம் விசுவாசத்தில் வளர்ப்பது, என்ற கேள்வி எம்மில் எழும். இன்றைய இளைஞர்களுக்கு திருவிவிலியத்தில் ஆர்வத்தை ஊட்ட வேண்டும். திருவிவிலியம் ஒரு வாழ்வுப் புத்தகம். வாழ்வளிக்கும் வார்த்தைகள், அதில் அடங்கி உள்ளன. திருவிவிலியத்தில் பற்றுக் கொண்டவன்தான் அதைப் பிறருக்குத் தனது வாழ்வாலும், வார்த்தையாலும் எடுத்துச் சொல்லலாம்.

எனவே இளைஞர்களைத் திருவிவிலியத்தில் பற்றுக் கொள்ள வைக்க, பற்றுறுதியோடு கிறிஸ்துவிற்காகப் பணிபுரியும் பணியாளர்கள் தம்மை மனமுவந்து முழுமையாக அர்ப்பணித்துப் போதிக்க முன்வரவேண்டும். இளைஞர்கள் விசுவாச வாழ்வில் வளர்வதற்கு அவர்களுக்கு முதலில் மறைக்கல்வி புகட்ட வேண்டியது நமது அத்தியாவசிய கடமையாகின்றது.

எனவே எமது மண்ணை விட்டு ஏதிலிகளாக புலம் பெயர் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இளைஞர்களே! புலம்பெயர் மண்ணில் நாம் காணும் இன்பங்கள் எல்லாம் கிறிஸ்துவிற்கு முன்பாக எல்லாம் தூசானவை.


இம்மண்ணிலே நாம் விசுவாச வாழ்வில் வாழ நம் மறை அறிவை நாமே வளர்த்துக் கொள்ள வேண்டும். திருப்பலியில் தெய்வீக பிரசன்னத்தை உணர்ந்து நமது வாழ்வை வழிபாடாக்குவோம். திருவிவிலியத்தில் நமது வாழ்வின் பொருளை அறிந்து கொள்வோம். திருவிவிலியத்தை நமது கையில் ஏந்துவோம்.

நடைபெறும் மறைக்கல்வி வகுப்புகளில் பங்கு பெறுவோம். இக்கல்வியை வருங்கால சந்ததிக்கு எமது வாழ்வாலும், வார்த்தையாலும் புகட்டுவோம். கடவுளுக்கும் அவர் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கடவுள் தீர்ப்பு வழங்குவார் என்ற தெய்வ பயத்துடனே வாழுவோம். அப்போதுதான் நமது விசுவாச வாழ்வு வளர்ச்சியடையும். எமது வாழ்வும் பொருள் உள்ள

**திருமதி மரிஸ்ரெலா பிறேம்குமார்**

## எரிச்சல் வேண்டாமே!

"நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?" என்று பைபிளில், யோனா அதிகாரம் 4:9 வசனம் அமைந்துள்ளது. யோனா என்பவர் மிகவும் எரிச்சல் உள்ளவராக இருந்தார். அவர், ஒரு ஆமணக்குச் செடியின் நிழலில் படுத்து உறங்குவது வழக்கம். ஒருநாள் அங்கு படுக்கச் சென்றபோது, செடியைப் பூச்சி அரித்திருந்ததைக் கண்டார். தனக்கு இடம் கொடுத்த அந்தச் செடி கூட, அழியும் நிலைக்கு வந்துவிட்டதால் விரக்தியடைந்த யோனா எரிச்சலுடன், 'நான் வாழ்வதைவிட, சாவதே நலமாக இருக்கும்' என்றார். இவரைப்




போலவே பல சகோதரர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் அலுவலகத்திலிருந்து வீ[illegible] வந்ததும் மனைவி, குழந்தைகளி[illegible] சல்படுவார்கள். அதன் கா[illegible] கையில் கிடைத்த பொருட[illegible] எல்லாம் தூக்கி எறிவார்கள். கா[illegible] என்பவன், கர்த்தருக்குக் காணி[illegible] ஒன்றைக் கொடுத்தான். ஆனால், அதை அவர் அங்கீகரிக்கவில்லை. இதன் காரமாக ஏற்பட்ட எரிச்சலால் தன் சொந்தச் சகோ தரனையே கொலை செய்து விட்டான். இதனால் அவன் பல சாபங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. நாம் நினைத்தது நடக்கவில்லை என்பதற்காக எரிச்சல் கூடாது. கஷ்டமான நேரத்திலும் சாந்தமாக இருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# What is the Nicene Creed?

Every mass you go to, whether it is a feast mass, a 'Holy Day of Obligation' mass, we as the congregation all unify before God to confess our faith. We say this by using the Nicene Creed (or Apostles Creed during the time of Easter). Firstly, the Latin word 'credo' means 'I believe…'. So, in short, the Nicene Creed is a summary of the key beliefs held by the Catholic Church (main doctrines). But have you ever wondered why we say this?

In the early history of the church's life, different followers of Jesus said different things about who he was and how he was related to God the Father. Because of the Jewish origins of Christianity, some members of the church couldn't accept Jesus as anything other than a prophet for God. They didn't believe that He was truly God himself, but that He was somehow lower than the Father. Alexander, a bishop at the time in Alexandria, and his successor Athanasius opposed these ideas of Jesus. He excommunicated (officially exclude someone from participation in the sacraments and services of the Christian



Church) an Egyptian Priest named Arius (250-366CE) who was a key figure for believing in the misconceptions. After seeing this, the Roman Emperor Constantine was not happy that the Church was becoming more divided and he commanded Alexander and Arius to sort out their differences; but this didn't happen, so Constantine called the Council of Nicaea in 325CE. The meeting of the council is known famously as the first ecumenical council of the Catholic Church.

During this meeting, the bishops agreed and created a statement of their beliefs to clear up any doubts. This was the early version of the creed known as the Creed of Nicaea. This creed contained the crucial word 'homoousios', meaning 'consubstantial' or made of the same substance. This shows the link between Jesus and God the Father. However, both Arius and Alexander still argued. After so much trouble, Athanasius in 328CE succeeded as bishop and persuading all that Jesus and God are of the same substance.

In 360CE, the question then shifted on to the Holy Spirit and whether he was related to God as well. St Basil the Great suggested that God was one substance in three persons; Father, Son and Holy Spirit. St Gregory of Nazianzus taught that Jesus had two natures; divine and human. To resolve these issues, the First Council of Constantinople in 381CE met together where they expanded on the Creed of Nicaea to what it is today. They underlined that the Holy Spirit is also fully God. Technically, it is called the Nicene-Constantinopolitan Creed, but it's shortened to Nicene Creed.

**THARSHAN NICHOLAS-KENTAN**

# Our Tamil Culture Enhances our Faith




I feel that God is constantly around us, with us and within us. By taking part in Tamil Church, it brings together faith and our Tamil culture all in one. My parents have also been influential in my strong belief in Christianity and encouraging in doing readings in Tamil in front of big crowds. This helps not only improve my knowledge in the religion but also enables me to gain valuable life skills such as confidence. I will also make sure that my kids also remain to have a strong faith in Christianity as well as being able to read, write and speak Tamil.

All of this wouldn't have been possible without the Tamil Catholic Chaplaincy so I would like to thank them massively.

***-Manette: Wallington Parish Centre- Youth***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எம் பாவமே! எம் பாவமே! எம் பெரும் பாவமே....!

ஜனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. இலங்கைத் திருநாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகக் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் அரச அரி யாசனம் அமர்ந்துள்ளார். புதிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்ற எதிர்பார்ப்புகள் கொண்ட எண்ண அலைகள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடு இல்லாது அனைவர் உள்ளங்களிலும் எழுந்த வண்ணம் உள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பல்வேறு படிப்பினைகளை இலங்கை அரசியல் வரலாற்றில் பதித்துள்ளது. அதில் முதன்மையானதாகத் தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் இல்லாமல் அல்லது அனுசரணை இல்லாமல் சிங்கள மக்களின் வாக்குகளைக் கொண்டே ஒருவர் ஜனாதிபதியாக வரலாம் என்ற புதிய திருப்பம் அரசியல் வரலாற்றில் பதிவாகியுள்ளது. கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் இனத்தவரின் வாக்குகள் தான் இறுதியில் அவர்களைத் தலை நிமிர வைத்தது. அதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக 2015ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட்டுப் பெற்றுக்கொண்ட வெற்றியைக் குறிப்பிடலாம்.

சிறு கல்லைக்கொண்டு தாவீது கோலியாத்தை வீழ்த்தியதுபோல தமிழ், முஸ்லிம்களின் வாக்குகளைக் கொண்டு சிங்களவர்கள் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் வீழ்த்தி வெற்றி பெற்று வந்த வரலாறு இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் நிலை என்ன? என்ற முதன்மையான வினா இன்று தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஒன்றுமட்டும் உண்மை தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறையும் சிங்கள இனத்தவருக்குத்தான் தமது வாக்குகளை வழங்கினர். தம்மினம் சார்ந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு வழங்கவில்லை. துரதிஸ்ட வசமாகத் தாம் ஆதரித்த சிங்கள இனத்தைச் சார்ந்த ஜனாதிபதி வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார். கட்சிக்குள்ளிருந்த உட்பூசல்களும், தலைமைத்துவத்தின் நெறி பிறழ்வுகளும் அவரின் தோல்விக்குக் காரணம் எனத் தற்போது பல புதிய சர்ச்சைகள் கிளம்பியிருந்தன. எது எவ்வாறாக இருப்பினும் தமிழ், முஸ்லிம் சமூகம் சிங்கள சமூகத்தையே ஆதரித்து நின்றமை நிதர்சனமாகும். அதனிலும் பகடைக்காய்களாக உதைபட்டதும் அப்பட்டமான நிதர்சனமாகும்.




புதிய ஜனாதிபதி தனது பதவியேற்பின்போது நான் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி என்ற கூற்று ஒன்றை திருவாய்மலர்ந்தார். அதன் பொருள் தனக்கு எதிராக வாக்களித்தவர்களுக்கும் தானே ஜனாதிபதி என்பதை அவர் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ், முஸ்லிம் இனத்தவராகிய நாம் ஜனாதிபதியின் இந்தக் கூற்றின் மூலம் உணரத்தக்க படிப்பினை யாது என்பதை சிந்தித்தாக வேண்டும்.

தமிழினம் முப்பது ஆண்டுகாலப் போரியல் வரலாற்றில் பல்வேறு கசப்பான படிப்பினைகளைச் சிங்களத் தலைமைத்துவங்களிடமிருந்தும் நமது தலைமைத் துவங்களிடமிருந்தும் கற்றுக்கொண்டது. இன்றும் கற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. நமக்கு எந்த வகையிலும் நிரந்தரமான விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்பதை இவை கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்றுமில்லை எனக் கூறியதுடன், 1983ம் ஆண்டு யூலை மாத இனக்கலவரத்தில் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தபோது தேவையானால் நான் பிசாசுடனும் கூட்டுச்சேர்வேன் எனக் கூறினார். இதே வரிசையிலும் பாணியிலும் அனைத்துத் தலைமைத்துவங்களும் காலடி வைத்தன. 2015ம் ஆண்டு தமிழ், முஸ்லிம் இனத்தவரின் வாக்குகளில் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினையை நீக்குமாறு கேட்டபோது அவர்கள் எங்கிருக் கிறார்கள் என்று சொல்லுங்கள் நான் கூட்டிவருகிறேன் எனக் கூறினார்.

தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படும்.. தீர்க்கப்படும் எனத் தமிழ்த் தலைமைத்துவங்களும் கால எல்லைகளை வகுத்த வண்ணமே இருக்கின்றன. ஒவ்வொரு தைப்பொங்கலாக... சித்திரை வருடப்பிறப்புக்களாக.... தீபாவளிகளாக.... கிறிஸ்மஸ் ஆகக் காத்திருந்து காத்திருந்து காலங்கள் போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலையிலே தான் மீண்டும் ஒரு புதிய யுகம் நவம்பர் 18 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. அந்த யுகத்திலும் அர்த்தம் உள்ள சமிக்ஞைகள் தெரியுமா என்ற அங்கலாய்ப்புடன் வாரம் ஒன்றைக் கடத்திவிட்டோம். ஆக்க பூர்வமான சமிக்ஞைகள் தெரிவதாகத் தெரியவில்லை.

வழக்கம் போல கிழக்குத்தான் உதிக்கின்றது. தமிழ், முஸ்லிம் இனத்தவரின் உரிமைகள், சுதந்திரங்கள் தொடர்பாகச் சிங்களத் தலைமைத்துவங்களின் மனங்களில் அமைதியான எண்ணங்கள் நல்லாட்சி மற்றும் ஜனநாயகத் தத்துவத்தில் உதிக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். அவ்வாறு உதிக்காது விடில் அது எம் பாவமே! எம் பாவமே! எம் பெரும் பாவமே....!

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150 வது உலக புலம்பெயர்ந்தோர் அகதிகள் தினத்தில் பரிசுத்த தந்தையின் சவால்!

• எமது பரிசுத்த தந்தை பிரான்சிஸ் அவர்கள் 150 வது உலக புலம்பெயர்ந்தோர், அகதிகள் தினத்தை இவ்வாண்டு செப்டெம்பர் 29 ம் திகதி உரோமாபுரியிலுள்ள புனித பேதுருவானவர் சதுக்கத்தில் பலி நிறைவேற்றி நினைவு கூர்ந்தார்.

• அன்று இருபது அடி நீளமான ஒரு சிற்பத்தைத் திரைநீக்கம் செய்தார். இச்சிற்பம் பலவின, கலாசாரத்தைச் சேர்ந்த எல்லா சரித்திர பின்னணியையும் கொண்டது. இச்சிற்பத்தில் உருவங்கள் தோளோடு தோளாக ஒன்றிணைந்து ஒருவரையொருவர் கட்டித் தழுவியபடியும், இவ் வேறுபட்ட வித மக்கள் மத்தியில் தேவதூதனின் இறக்கைகள் மையமாக இருப்பதும் அவர்கள் மத்தியில் ஒரு புனித பிரசன்னத்தை வெளிக்காட்டுகின்றது. அந்நியர்களிலும் புனித பிரசன்னத்தை – அதாவது, அகதிகளிலும் புலம்பெயர்ந்தோரிலும் இது கணிக்கப்பட வேண்டுமென்பதை இச்சிற்பம் விளக்குகின்றது. இதுவே பாப்பிறையின் ஆழமான சிந்தனைத் தூண்டுதலுமாகும்.

• ஏரோதின் கையினின்று குழந்தை இயேசுவைக் காப்பாற்ற எகிப்துக்கு விரைந்து ஓடிய சூசையும், மரியும் - கோடிக்கணக்கான புலம்பெயர்ந்தோர், அகதிகளைப் பிரதிபலிப்பதை பரிசுத்த தந்தை எடுத்துக் காட்டுகிறார்.

• அவர் கூறுவது, எமது புவிக்கோளத்தில் வதியும் ஒவ்வொருவரும் இறைவனின் பிள்ளைகள். இறையன்பிலும், இறை சாயலிலும், உருவிலும் படைக்கப்பட்டவர்கள். (தொ. நூல்: 1 : 26 ) அவர்கள் ஒவ்வொருவர்க்காகவும் இறைமகன் சிலுவையில் பாடுபட்டு, மரித்து அவர்கள் அனைவரையும் இறைத்தந்தையுடன் மீண்டும் ஒப்புரவாக்கி ஒன்றிணைத்தார்.

• சட்டத்துக்குப் புறம்பான நிலையில் வாழும் தஞ்சம் கோரும் ஒவ்வொருவர்க்கும் இம்மனிதமாண்பு சொந்தமானது. அவர்கள் இறைமக்களாக கிறீஸ்தவ அன்பு, பாதுகாப்புக்கு உரிமையுடையவர்கள். திருச்சபை எவ்வாறு இதனை மதிக்கின்றது? மட்டுமல்ல (சட்டத்துக்குப் புறனாக ) தமது நாட்டின் எல்லைக்குள் வாழ்வதற்கு உரிமையற்றோர் மட்டில் திருச்சபையின் பணி என்ன? இதனை எவ்வாறு செய்கின்றது திருச்சபை? என்று திரு அவைத் தலைவரே சவால் விடுக்கின்றார்.

• இன்றைய சமூகத்தில் புலம்பெயர்ந்தோர், அகதிகள், வலோற்காரமாகக் கடத்தப்படும் பெண்கள், இளையோர், பிள்ளைகள் மட்டில் ஒரு அலட்சியப்பார்வை நிலவுகிறது. இதைக் கேட்கவும் முடிகின்றது. அவர்கள் புறந்தள்ளப்படுகின்றனர்.

• தூய ஆவி அன்பினதும், உண்மையினதும் ஆவி. அவர் மனுக்குலத்தைப் புனிதமான, புதிய மனுக்குலமாக்கும் வழியில் நடத்துவார். இதற்காகவே சிருஷ்டிகர்த்தா வேறுவித கலாசார, பண்பாடுகளினூடாக ஒரு ஒற்றுமையின் அமைப்பை ஏற்படுத்தினார்.


• பரிசுத்த தந்தையின் உருவகமும், அவர் வார்த்தையும் அன்புடன் கூடிய மென்மைத்தன்மையையும் அதிக தேவையுள்ளோருடன் மனித மாண்பையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய எம்மை ஊக்குவித்து அழைப்பு விடுக்கின்றது.

• "சகோதர அன்பில் நிலைத்திருங்கள். அந்நியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப் படுத்தியதுண்டு." (எபிரேயர் 13 : 2 )

• இதில் நம்மிடம் நாமே கேட்கவேண்டிய எவ்வாறு புலம்பெயர்ந்தோர் மட்டில் அல்ல, எம்மிடையேயும் உள்ள வேறுபாடுகளுடன் மனிதர் மட்டில் எம்மதிப்பு கணிப்பு, மனநிலை என்ன என்பதை வினாவி அன் அனைவரையும் அரவணைப்போம்.

**மனிதாவதாரமான நம் மூத்த சகோதரர்.**
**இயேசுவின் பிறப்பு வாழ்த்தும், புத்தாண்டு**
**சோபனமும் அனைவர்க்கும் உரித்தாகுக.**
**செபத்தில் ஒன்றிக்கும்**

Sr. M. Sophia





World peace is an ideal of freedom, peace and happiness among and within all nations and its citizens. It is an ongoing idea of planetery non-voilence of which nations willingly cooperate as per the system of governance that prevents warfare. Acoupleofwaytoachieveworldpeace are as followed.

To respect the environment and remember that Earth is the only place we can call home. I think that we will achieve peace when we, as a species, face an extinction level threat (aliens, virus, meteor, volcanoes etc) All in all, I hope to see you in 20 years when everyone and thing have equal rights and humans have acheived - our greatest threat- world peace.

By Vikash Vinothvimalraj
Wallington - Youth

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ONE SUNDAY OF THE YEAR FOR GOD'S WORD – POPE

– Fr Fausto Gomez, OP

Pope Francis' Apostolic Letter in the form of Motu Proprio begins thus: "He opened ["aperuit"] their minds to understand the Scriptures (Lk 24:45)… Without the Lord who opens our minds to them, it is impossible to understand the Scriptures in depth" (Aperuit Illis, AI, no.1). To remind us of the inexhaustible richness of the Word of God and its daily influence in our Christian lives, the pontiff declares a Sunday dedicated to the Word of God. The recent Apostolic Letter (issued September 30, 2019) is a short, meaty and yet simple and attractive papal text addressed to all Christians and believers. Hereafter, we present a summary of the principal teachings. As much as possible, we quote the words of Pope Francis.

We wish to underline four main points in Aperuit Illis: First: the Sunday of the Word. Second: the significance of the Bible. Third, the practice of reading the Bible and witnessing its teachings in our life. And fourth: those responsible for sharing the word of God with others.

THE SUNDAY OF THE WORD

In no. 3 of AI, Pope Francis declares that "the Third Sunday in Ordinary Time is to be devoted to the celebration, study and dissemination of the word of God." This Sunday of the Word of God, the Pope continues, "will thus be a fitting part of that time of the year when we are encouraged to strengthen our bonds with the Jewish people and to pray for Christian unity. This is more than a temporal coincidence: the celebration of the Sunday of the Word of God has ecumenical value, since the Scriptures point out, for those who listen, the path to authentic and firm unity."

Later on in no. 8 we read: "A day devoted to the Bible should not be seen as a yearly event but rather a year-long event, for we urgently need to grow in our knowledge and love of the Scriptures and of the risen Lord, who continues to speak his word and to break bread in the community of believers."

In the last number, no. 15, and in its last paragraph our current Pope encourages us thus: "May the Sunday of the Word of God help his people to grow in religious and intimate familiarity with the sacred Scriptures."

THE FUNDAMENTAL SIGNIFICANCE OF THE BIBLE

The Holy Bible is focused on the Word of God, Jesus Christ. We know well the emblematic words of Saint Jerome: "Ignorance of the Scriptures is ignorance of Christ" (AI, 1). The Pope underlines: "The Bible, as Sacred Scripture, speaks of Christ and proclaims him as the one who had to endure suffering and then enter into his glory (cf Lk 24:26). Not simply a part, but the whole of Scripture speaks of Christ. Apart from the Scriptures, his death and resurrection cannot be rightly understood… Since the Scriptures everywhere speak of Christ, they enable us to believe that his death and resurrection are not myth but history, and are central to the faith of his disciples" (AI, 7).

Pope Francis emphasizes the role of the Holy Spirit: "The role of the Holy Spirit in the Scriptures is primordial. Without the work of the Spirit, there would always be a risk of remaining limited to the written text alone. This would open the way to a fundamentalist reading, which needs to be avoided, lest we betray the inspired, dynamic and spiritual character of the sacred text" (AI, 9).

There is a necessary link of Sacred Scriptures with Tradition: "We frequently risk separating Sacred Scripture and Sacred Tradition, without understanding that together they are the one source of Revelation. The written character of the former takes nothing away from its being fully a living word; in the same way, the Church's living Tradition, which continually hands that word down over the centuries from one generation to the next, possesses that sacred book as the 'supreme

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

rule of her faith' (Vatican II, Dei Verbum, 21). Moreover, before becoming a written text, sacred Scripture was handed down orally and kept alive by the faith of a people who, in the midst of many others, acknowledged it as their own history and the source of their identity. Biblical faith, then, is based on the living word, not on a book" (AI, 11). It is to be noted, moreover, that the sacred Scripture is "aimed entirely at the integral salvation of the person" (AI, 9).

Commenting on the scene of the Risen Christ walking to Emmaus with two disciples, Pope Francis affirms: "The journey that the Risen Lord makes with the disciples of Emmaus ended with a meal. The mysterious wayfarer accepts their insistent request: 'Stay with us, for it is almost evening and the day is now far spent' (Lk 24:29). They sit down at table, and Jesus takes the bread, blesses it, breaks it and offers it to them. At that moment, their eyes are opened, and they recognize him (cf. v. 31)…" We underline the Pope's words: "Regular reading of sacred Scripture and the celebration of the Eucharist make it possible for us to see ourselves as part of one another. As Christians, we are a single people, making our pilgrim way through history, sustained by the Lord, present in our midst, who speaks to us and nourishes us" (AI, 8).

READING THE HOLY BIBLE AND PRACTICING ITS TEACHINGS

A popular prayer method that may help us much in reading (lectio) the Bible is, Pope Francis tells us, the practice of lectio divina (its first step is sacred reading). Among other methods, the practice of lectio divina in particular is "a way of showing the importance of learning how to read, appreciate and pray daily with sacred Scriptures" (AI, 3). Reading the Bible devotedly will urge us to share the Word of God with others: "The sweetness of God's word leads us to share it with all those whom we encounter in this life and to proclaim the sure hope that it contains" (cf 1 Pet 3:15-16)" (AI, 12).

Who are the blessed ones for Jesus? When a woman praised the mother of Jesus and called her "blessed," the Lord commen ted: "Rather, blessed are they who hear the word and keep it." And Mary, the disciple of disciples, kept the word, witnessed it in her life – humbly, faithfully, hopefully and lovingly. Pope Francis writes: "Along our path of welcoming God's word into our hearts, the Mother of the Lord accompanies us. She is the one who was called blessed because she believed in the fulfilment of what the Lord had spoken to her (cf Lk 1:45)" (AI, 15).

Practicing the teachings of the Bible entails above all loving God and all neighbors, principally the needy and poor. Writes Pope Francis: "Yet another challenge raised by sacred Scripture has to do with love…, [which means] to listen to sacred Scripture and then to practice mercy: this is the great challenge before us in life. God's word has the power to open our eyes and to enable us to renounce a stifling and barren individualism and instead to embark on a new path of sharing and solidarity" (AI, 13).

THOSE RESPONSIBLE FOR EXPLAINING SACRED SCRIPTURES

Every Christian is personally responsible for reading the Bible often. Among the members of the Church, some are more responsible, including in particular, pastors, preachers, and catechists (cf AI, 5).

The preachers of homilies have a special responsibility to read, know and explain the liturgy of the word. Words of Pope Francis: "Those of us who are preachers should not give long, pedantic homilies or wander off into unrelated topics. When we take time to pray and meditate on the sacred text, we can speak from the heart and thus reach the hearts of those who hear us, conveying what is essential and capable of bearing fruit" (AI, 5).

May we invite you, dear readers, to read the wonderful Apostolic Letter Motu Proprio Aperuit Illis of Pope Francis! It is only 9 pages, and 15 numbers! You will not regret it. I do not, but rejoice. Remember that we often pray with the Psalmist: "Your word, O Lord, is lamp for my feet and a light for my path" (Ps 119:105).

## A Christmas Wish

I wish I could go back to the past,
of Christmases long ago.
I wish I could see my loved ones
who have passed on long ago.

I'd love to be that child again
who sat on Santa's knee.
Yes, all these memories that I have
decorating the tree.

I wish I could wake Christmas morn
to see Daddy baking ham.
And to see my mamma making her
yummy
famous candy yams.

I wish I could go to Grandma's house;
her cookies were the best.
The pies and cakes that she would bake,
she kept them in a chest.

Her house would smell like ginger,
with a hint of Balsam Pine.
She'd decorate the house with lights,
and it would surely shine.

All these Christmas memories,
it seems like yesteryear.
I'd love to go back to the past.
This is my Christmas prayer.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் ஐக்கிய இராட்சியம்

## "பிறரன்புப் பணி செய்வோம் திரளான பாவங்களைப் போக்குவோம்"

தமிழ் கத்தோலிக்க ஒன்றியமானது இற்றைக்குப் பதின்நான்கு வருடங்களாக பற்பலசேவைகளை ஆற்றிவருவதை யாவரும் அறிந்த உண்மையே

அதாவது யாழ்ப்பாணம் திருகோணமலை மன்னார் அத்துடன் மட்டக்களப்பு மறைமாவட்டங்களையும் உள்ளடக்கியதாக எமது சேவை தொடர்கிறது. இதன் சிறப்பென்னவென்றால் இந்த மறை மாவட்டங்களில் உள்ள கத்தோலிக்க பிள்ளைகள் மட்டுமல்ல, இந்துசமயப் பிள்ளைகளும் உள்வாங்கப்பட்டுப் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த சிறப்பம்சமாகப் பணமானது நான்கு மறைமாவட்ட ஆயர்கள் ஊடாகவே அனுப்பப்படுகிறது. அத்துடன் அனைத்தும் அங்கிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது.

இன்னமும் தாயகம் பல தேவைகளை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கிறது. நீங்கள் ஒவ்வொரும் இயலுமானவற்றை அளித்து அவர்களையும் வாழவைப்பீர்களென்று காத்திருக்கிறார்கள்.

## இதழுக்கோர் ஊர் – சில்லாலை

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள ஓர் அழகிய கிராமமே சில்லாலை. நீலநிறத்தைத் தரையில் பரப்பியது போன்ற தென்றல் வீசும் கடற்கரையும் அருகருகே . இளந்தென்றலை அள்ளிவாரிக் கொடுத்துக் கொண்டிருக்கும். இங்கு பச்சைப் பசேலெனப் பயிர்ச்செடிகொடி,பழவகைகள்,வெற்றிலை அத்துடன் பாக்கு எல்லாமே பஞ்சமில்லாமல் கிடைக்கும்.

அத்துடன் சித்த வைத்தியத்திற்கும் பிரபல்யம் பெற்ற ஊராகப் பேசப்படுகிறது. இன்னமும் அவர்களின் பரம்பரை வேறு இடங்களில் அத்தொழிலைச் செய்து வருகின்றமை சிறப்பம்சமாகக் கொள்ளக்கிடக்கிறது.

யாழ் மாவட்டத்தில் அதிகளவிலான ஆன்மீக நறுமணங்கமழும் வகையில் அந்தளவுக்கு அதிகளவிலான அருட்தந்தையர்களையும் கன்னியாஸ்திரிகளையும் தன்னகத்தே கொண்டது என்ற பெரும்பேற்றையும் ஆசீர்வாதங்களையும் கொண்ட சிற்றூர். இவ்வூர் பெற்றெடுத்த ஆன்மீக முத்துக்களாக அருட்தந்தையர்கள் கன்னியாஸ்திரிகள் நமக்கெல் லாம் கிடைத்த பொக்கிஷங்களே ! ! !

**இங்குள்ள சிறப்பம்சமாகக் காணப்படுவது**

மாலை வேளையானால் அனைத்து வீடுகளிலும் இரவுணவு இருக்கிறதோ என்னவோ, செபமாலை செபிக்க மறக்கமாட்டார்கள். அருகேயுள்ள வீதிகளில் உள்ள அனைவரின் காதுகளிலும் செபமாலை கணீரென ஒலித்துக் கொண்டேயிருக்கும். இது சில்லாலைக்கே உரிய சிறப்பம்சமாகக் காணப்படுகிறது. அதனால் தானோ என்னமோ அங்கு அதிககுருக்கள்கன்னியர்கள் உருவாகியுள்ளார்கள்..

இங்குதான் புனித.ஜோசவ்வாஸ் அடிகளார் முதன் முதலில் காலடி பதித்தார். அதாவது கத்தோலிக்க சமயமானது நெருக்கடிக்குள்ளான வேளையில் அங்குள்ள மக்களே கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு அனுசரணையாகவும், அத்திவாரமாகவும் விளங்கினார்கள்.. இலங்கையில் ஆட்சியில் இருந்த டச்சுக்காரர்கள் கால்வினிசத்தைப் (Calvinism) பின்பற்றியவர்கள். எனவே கத்தோலிக்கரையும், குருமாரையும் கொலை செய்தனர். பள்ளிகளைத் தரைமட்டமாக்கினர். இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்கு சில்லா லையூர் மக்கள் புகலிடம் வழங்கினர். அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு சேவையாற்றினார். கத்தோலிக்க சமயத்தை எமது மண்ணில் வளர்த்தெடுக்க, தழைத் தோங்க உரமிட்டவர்களே சில்லாலையூர் மக்கள் ஆகவே அந்த ஊரை அனைவரும் பெருமைப்படுத்தி நினைத்திருப்போம்.

Thires – Wallington

## தெரிந்துகொள்வோம்

வளையாபதி, குண்டலகேசி ஆகியன ஐம்பெரும் காப்பியங்கள்

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. அகநானூறு
5. புறநானூறு
6. பதிற்றுப்பத்து
7. பரிபாடல்
8. கலித்தொகை

**என்னும் எட்டுத்தொகைச் சங்க நூல்கள்..... !**

01. திருமுருகாற்றுப்படை
02. சிறுபாணாற்றுப்படை
03. பெரும்பாணாற்றுப்படை
04. பொருநராற்றுப்படை
05. முல்லைப்பாட்டு
06. மதுரைக்காஞ்சி
07. நெடுநல்வாடை
08. குறிஞ்சிப் பாட்டு
09. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

**என்னும் பத்துப்பாட்டு சங்க நூல்கள்....!!**

உலகினர் வியந்து போற்றும்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை
4. இன்னாநாற்பது
5. இனியவை நாற்பது
6. கார் நாற்பது
7. களவழி நாற்பது
8. ஐந்திணை ஐம்பது
9. திணைமொழி ஐம்பது
10. ஐந்திணை எழுபது
11. திணைமாலை நூற்றைம்பது
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை

**என்னும் பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்கள்.....!!!**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவக சிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி

**போன்ற 5பெரும் காப்பியங்கள்..... !!!**

1. அகத்தியம்
2. இறையனார் களவியல் உரை
3. புறப்பொருள்வெண்பாமாலை
4. நன்னூல்
5. பன்னிரு பாட்டியல்

**போன்ற இலக்கண நூல்கள்.....!!!**

1. தேவாரம்
2. திருவாசகம்
3. திருப்பாவை
4. திருவெம்பாவை
5. நாச்சியார் திருமொழி
6. ஆழ்வார் பாசுரங்கள்

**போன்ற உலகின் மிகச் சிறந்த பக்தி இலக்கியங்கள்... !!!**

1. முத்தொள்ளாயிரம்
2. முக்கூடற்பள்ளு
3. நந்திக்கலம்பகம்
4. கலிங்கத்துப்பரணி
5. மூவருலா
6. முத்தொள்ளாயிரம்

**போன்ற எண்ணற்ற சிற்றிலக்கிய வகைகள்.....!!!**

**Sivakunam**
**Chingford**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Catechism in Earlsfield



Catechism in Milton Keynes



Catechism in Leicester



Catechism in Eastham



Tamil Chaplaincy-Glasgow


# Mountain View Property Agents

**Residential, Commercial, Sales, Lettings, Mortgages, Loans**

***Shiyaan Yogaraja***
*07958434663*
***Business Developer***
*enquiry@movetoproperty.co.uk*

***115, London Road, Mitcham, Surrey,CR4 2JA***
**T : 020 8127 1771 M : 077 0341 2537**
**Web : www.movetoproperty.co.uk**

- Accident Protection
- Income Protection
- Life Cover
- Critical Illness Cover
- Whole of Life Cover (Funeral Expenses)
- Home Insurance
- Landlord's Insurance
- Mortgage Protection
- Mortagages (in house team)
- Private Medical Insurance*
- Commercial Insurance*
- Pet Insurance*
- Wills*

***Introductory service (specialist partners provide adivice)**

**Will writting is not regulated by the Financial Conduct Authority. Solicitor firm used to produced Wills are regulated by the Solicitors Regulation Authority.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Editor's Pen



Dear brothers and sisters in Christ,

Let me wish you a Merry Christmas and a Happy New year. And I express my sense of gratitude for all who gave hands in my ministry. My ministry in chaplaincy is always a cooperative and collaborative one. Your untiring work and faith make things possible that seem impossible. I really thank My office assistant, finance \committee members, Directors and their team, coordinators, persons in charge for certain ministries in every centre, well wishers and members. May good Lord continue to bless you and your families.

New year would bring new hopes and we trust it would open new ventures for our chaplaincy. I'm going to start my third year as chaplain and it really a rare opportunity to serve you in christ. Once again I wish to remember you to be incorporated in your local church. This is very important in your spiritual journey as a community. Chaplaincy is committed to offer you tamil masses and any assistance you need which we could fulfill. However as a UK citizen you should have incorporated in your local church. Kindly go to nearby catholic church, meet the parish priest, register yourself, attend mass regularly and have a communion with the local community. Bishop John Wilson insisted its importance when he met ethic chaplains in November in Tooting.

Meanwhile, the new year 2020 may bring good tidings and open up the Heavenly blessings. Let us grow as a faith seeking community under the patronage of Our blessed Mother Mary.

May God bless you
Marry Christmas and a Happy New Year

*Fr Elmo Jeyarasa*
*Tamil chaplain*

**மனித நேயத்தை .....** (1ம் பக்கத்தொடர்ச்சி)

இன்றும் நம் மத்தியில் இதே நிலைதான் காணப்படுகின்றது. எங்கு பார்த் தாலும் மோதல்களும், சமுதாய சீரழிவுகளும், போட்டி பொறாமைகளும், அரசியல் தந்திரோபாயங்களும், சமூக ஏற்றத்தாழ்வுகளும், மனிதனையே மனிதன் வதைக்கும் அபாய ங்களும், படுகொலைகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளது. பகுத் தறிவு ஜீவன்களென சொல்லிக்கொள்ளும் மனிதர்களாகிய எமது மனங்களில் பசுமைக்குப் பதில் வரட்சி நிலவுகிறது் மலர்களுக்குப் பதில் முட்புதர்கள் மண்டிக்கிடக்கிறது பயிர்களுக்குப் பதில் களைகள் விளைந்து கிடக்கிறது.

இத்தகைய மனித நேயத்தின் மறைவு மனிதகுல வளர்ச்சிக்கு தடையாக அமைந்துள்ளது. இத்தகைய சூழலிலே தான் மீண்டுமொரு கிறிஸ்மஸ் விழாவை எதிர்நோக்குகின்றோம். கிறிஸ்துவின் வருகையின் நோக்கத்தை அறியாது வெறும் சடங்கு சம்பிரதாயமாக கிறிஸ்மஸ் விழாவை அனுசரிப்பதில் பயனேதுமில்லை. இயேசு பிறப்பின் உண்மையைத் தேட வேண்டும். அன்று கிறிஸ்து பிறந்த போது ஏரோதன் தேடினான் -இயேசுவை கண்டடையவில்லை. கீழ்த்திசை ஞானிகள் தேடினார்கள் - இயேசுவை கண்டடைந்தார்கள். ஏரோதன் தேடல் மனிதநேயத்துக்குப் புறம்பான ஆக்கிரமிப்பு, ஆதிக்கம், ஆணவம், கொலைவெறித்தனம் நிறைந்த தேடலாக இருந்தது. ஆனால் கீழ்த்திசை ஞானிகளின் தேடல் உண்மையின் தேடலாக, மனித நேயத்தின் தேடலாக, விடியலின் தேடலாக அமைந்தது. எனவே தான் அவர்களுக்கு வால்வெள்ளி சரியான பாதையைக் காட்ட அவர்கள் இயேசுவை கண்டடைந்தார்கள். இயேசுவுக்கு ஞானிகள் கொடுத்த காணிக்கைப் பொருட்களில் இயேசுவை அரசராக பொன்னும், இறைவனாக தூபமும், தியாகத்தின் திருவுருவமாக வெள்ளைப்போளமும் அடையாளம் காட்டியது. உண்மையின் தேடல் இவ்வாறாகத்தான் இருக்கும். நாமும் ஏரோதன் தேடலாக இயேசுவைத் தேடாமல் ஞானிகளின் தேடலாக இயேசுவைத் தேடிக் கண்டடைவோம்.

யாழ் மறைமாவட்டம் மலரவிருக்கும் புத்தாண்டை "துயருறுவோர் ஆண்டாக" பிரகடனம் செய்யும் இவ்வேளையில் இம்மண்ணில் மனிதநேயம் மலர, மனித மாண்பு தழைக்க நாம் உழைப்பதுடன் துயருறுவோரை எம் செபங்களிலும், கரங் களிலும் தாங்கி கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ள விழா வாக்குவோம்.

அனைவருக்கும் எனது இறை ஆசீருடன் கூடிய கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

Loving
*Father*
help us remember
the birth of JESUS
that we may share in
*the song of the angels*
**the gladness of the shepherds**
and the worship of the wise men
**Close the door of hate and**
*open the door of love* all over the world. Let kindness come with every gift and good desires with every greeting. Deliver us from evil by the *blessing which Christ brings*, and teach us to be merry with clear hearts. May the Christmas morning make us happy to be *Thy children*, and the Christmas evening bring us to our beds with graceful thoughts,
*forgiving and forgiven,*
for Jesus' sake
**AMEN**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Layout by St.Joseph's Catholic Press, 360, Main Street, Jaffna. & Printed at Net Printers - UK